# ஆயுதங்களை கைவிட்டு பேச்சுக்கு முன்வரவேண்டும்

## ரணில் கோரிக்கை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 4 இதழ் 6
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-2-1994

(கொழும்பு) விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன், ஆயுதங்களை கைவிட்டு அரசுடன் பேச்சு நடத்த முன்வரவேண்டும் என்று பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறுகையில்: தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனக் (4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்மீது துப்பாக்கிச் சூடு!

### ஒருவர் காயம்; மூவர் கைது

(சென்னை) கச்சதீவுக்கு அண்மையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்தார். மூவர் கைது செய்யப்பட்டனர். (4-ம் பக்கம் பார்க்க)

## ★ அமைதி ஏற்பட புலிகள் தடையில்லை —

# சமாதானம் சிங்களவர்கள் மத்தியிலிருந்தே வரவேண்டும்

## மதப் பிரமுகர்களிடம் கரிகாலன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"சமாதானம் பெரும்பான்மை சிங்களவர்கள் மத்தியிலிருந்து ஏற்பட வேண்டும்" என்று கிறிஸ்தவ மத பிரமுகர்களிடம் தெரிவித்துள்ளதாக தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் லெப். கேணல் பொன்னம்மானின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து பல மதப்பிரமுகர்கள் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு இங்கு வருகின்ற விருந்தாளிகளுக்கு எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். சமாதானம் பெரும்பான்மை சிங்களவர் மத்தியில் ஏற்பட வேண்டும். இதனை நாம் அவர்களுக்கு ஆணித்தரமாக தெளிவுபடுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

1987-ம் ஆண்டு கைநடி... (4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலி, பொம்மர், ஷெல் வலிகாமம் வடக்கில் கடும் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்) வலிகாமம் வடக்கு பகுதியில் நேற்றும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஹெலி, பொம்மர், ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை 9-00 மணியளவில் ஹெலி கொப்டர் ஒன்று இப்பகுதியில் 50 கலிபர் தாக்குதலை நடத்திய அதேவேளை இரு குண்டு வீச்சு விமானங்கள் மாறி மாறி குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசின.

இச்சமயம் பலாலி இராணுவ முகாமிலிருந்து கடுமையான ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. (நி)

## கிழக்கில் தேர்தல் முடிந்த கையோடு வடக்கில் தேர்தல்

### — ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு) கிழக்கில் நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்தவுடன் வடக்கிலும் தேர்தல் நடாத்த அரசு முடிவு செய்திருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

வடக்கில் நிலவுவது பயங்கரவாதமே. இதனை எவ்வாறாவது அடக்கவேண்டும். இப்பிரச்சினையால் நாடே பெரும் பொருளாதார சீரழிவில் சிக்கி (4-ம் பக்கம் பார்க்க)

## காரைநகரிலிருந்து கடும் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்) காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு பொன்னாலைப்பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை குடியேற்றம் மற்றும் கரையோரப் பகுதிகளை நோக்கியே இச்ஷெல்கள் ஏவப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. -நி

## ★ வெளிநாடுகளின் இராணுவ உதவி பெற்றாலும் புலிகளை அழிக்க முடியாது

(கொழும்பு) வெளிநாடுகளின் உதவியைப் பெற்றாலும் விடுதலைப் புலிகளை ஒருபோதும் அழிக்க முடியாது என்று 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. அப்பத்திரிகையில் வெளிவந்த இரு பான கட்டுரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

புலிகளை அழிப்பதற்கு சாத்தியமானது வேண்டும். அந்த அளவுக்கு விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மிகவும் பலம் அடைந்துவிட்டார்கள். அத்துடன் தமிழ் (4ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர்களை மூடி மறைக்க அரசு முயற்சி

(கொழும்பு) காணாமல் போனவர்களின் பெற்றோர்களுக்கு பணத்தை வழங்கி அவர்களை அரசு விலைக்கு வாங்க முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா பிரஜைகள் பெரமுனையின் உபதலைவர் ரோஹான் ஜயதுங்க தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தோற்கடிக்க அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு) விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து அவர்களைப் பலவீனப்படுத்த வேண்டுமென சிறிலங்கா அரசுக்கு இராணுவ புலனாய்வு பிரிவு ஆலோசனை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் ஒரு போலியான சமாதானப் பேச்சுக்களை நடத்தி அவர் (4-ம்பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை நடைபெறும்

யாழ்ப்பாணம்

கிளாலி — பூநகரி படகுச் சேவை, இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். -இ

## புதிய அமைப்பை ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு) எம்பிலிப்பிட்டிய பகுதியில் காணாமல் போனவர்களின் பெற்றோர்களை ஒன்று சேர்த்து மற்றொரு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தரப்பைச் சேர்ந்த அரசியல் வாதி ஒருவரும் முன் (4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**O/L கணிதம் 94**

Distinction, Credit பெறு பேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவமுள்ள B.Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85 இலங்கைவேலடி, திருநெல்வேலி. (இ-799)

**மணப் பெண் தேவை**

பிரான்ஸில் நிரந்தர வேலை பார்க்கும் 38 வயது சுந்தேச லிங்க மணமகனுக்குத் தேவை இலங்கை வந்து திருமணம் செய்வார். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (இ-803)

**அதே விலை**

சர்வதேச சிறுவர் பாடசாலையின் பாலர் பாட நூல்கள், அங்கீகாரம் பெற்ற அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ் A B C Book விற்பனைக்கு வந்துவிட்டது. மொத்தமாகவும், தனியாகவும் பெறலாம். விலை ரூபா. 80/- ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிவா பிறின்டர்ஸ், கைதடி. (இ-795)

**விற்பனைக்கு**

"றெடியின் 20 இல்" செய்த ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு. கோஸ்பவர் 1200 "பிரும் எம்போரியம்" 38, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-797)

இருபக்கமும் ஒழுங்கைகளும் தென்னை, மா, பலா மரங்களும் தனிக்கிணற்றுடன் குளியலறையுமுள்ள எட்டுப்பரப்புக் காணியும் பெரிய வீடும் தாவடியில் விற்பனைக்குண்டு. க. வைத்தியநாதர், தேவாலய ஒழுங்கை, தாவடி. (இ-808)

நல்ல தரமான பலா மரத்தாலான வீணை விற்பனைக்குண்டு. தொடர்பு: எம். அருளானந்தம், இல. 59, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (எ-3830)

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆதிப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகள் வழிபாட்டுடன் இடம்பெறும். தேர்த் திருவிழா 24ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். -154

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தினர் "நாடகத்தில் இசை அனுபவம்" என்னும் நிகழ்வை இன்று புதன் பி.ப. 3-30 க்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நிகழ்த்தவுள்ளனர். இதில் இசையமைப்பாளர் திரு. கண்ணன் தன் நாடக இசை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வார்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மெய்யியற் கழகத்தின் ஆதரவில் "ஆன்மதரிசனம்" அல்லது "...இருப்பியலவாதம்" எனும் தலைப்பில் திரு மு. ஞானப்பிரகாசத்தின் கருத்துரை யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

---

### யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

யாழ். நகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்கள் அனைவரும் தங்கள் வர்த்தக நிலையங்களில் தற்சமயம் பாவிக்கப்படும் தங்கள் வியாபார விளம்பரப் பலகைகள் எல்லாம் தூய தமிழில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆங்கில வார்த்தைகளை நேரடியாக தமிழில் எழுதுவது தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு குறுகிய காலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரவிருப்பதால் இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அறிவதற்கு எமது சங்கப் பணிமனையுடன் உடனே உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்!!

வே. சிற்சபேசன் — தலைவர்
நா.த. அன்னலிங்கம் — பொதுச்செயலாளர்

**யாழ். வர்த்தகர் சங்கம்,**
21, மேல் மாடி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(ஏ-3883)

---

### மூன்றாண்டு
## நினைவலைகள்



உயர்திரு
**தம்பிப்பிள்ளை இராசலிங்கம்**

B. A (Econ); M. A. Dip-in Ed; ex. S L. E S; ex. M. P. Followship in Educational Planning and Administration (A. I. E. P. A) New Delhi (UNESCO Sponsored)

(கிளிநொச்சி, உடுப்பிட்டி வட்டாரங்களின் முன்னாள் கல்வி அதிகாரியும், உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்)

தோற்றம்: 21 - 11 - 1933
மறைவு: 20 - 2 - 1991

**திதி: 16-2-1994**

மூன்றாண்டு போனாலும்
முழுமதியே நினைவலையில்
தேனான நாவினிலே
தொண்டுகளே நினைவுறுத்தும்
சான்றோனே விளக்கமெனும்
சந்ததியின் தலைமுதலே
சான்றாகும் எம் வளர்ச்சி
தந்தவுந்தன் பாதையன்றோ
நூறாண்டு போனாலும்
நெடிய பொழுதும் நினைவலையில்
மாறாது ஐயாவே!

**குடும்பத்தினர்**

"ராஜ்மஹால்"
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(இ-809)

---

### அதிர்ஷ்ட லாபச்
## சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி வணிக மாணவ மன்றத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு - 11237
2-வது பரிசு - 14058
3-வது பரிசு - 10496

ஆறுதல் பரிசுகள்

283, 14726, 10452, 11228, 12011, 289, 14107, 12792, 11617, 11138.

பரிசு பெற்றோர் ஒரு மாதத்துக்குள் பரிசில்களை வந்து பெறவேண்டும்.

வணிக மாணவ மன்றம்
யாழ் / வைத்தீஸ்வரா கல்லூரி

(சி-810)

---

### இளம் கலைஞர் மன்றம்
## 14-வது இசைவிழா

—0—0—0—0—0—0—0—0—0—0—0—

இடம்: கலா மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

5ம் நாள்

**16-2-94 புதன்கிழமை**
**"வெங்கடேஸ்வரா"**
**கந்தசாமி அன் சன்ஸ், உடுப்பிட்டி.**
**கந்தசாமி கிருபாகரன்,**
**உடுப்பிட்டி ஆதரவில்**

மாலை 4-00 — 5-00 மங்கள இசை
நாதஸ்வரம்: கே. சந்திரன், எஸ். கோவிந்தசாமி
தவில்: ஆர். ஷண்முகசுந்தரம், ஆர். உலகநாதன்

5-00 — 5-10 மிருதங்க இசை
ஈ. ரகுலன், கே. மயூரன்

5-10 — 5-30 வீணை இசை
செல்வி மு. சத்தியபாமாவின் மாணவர்கள்

5.30 — 5.50 பாட்டு
பாட்டு: பி. ஷயந்தா, கே. சௌமி, எஸ். காஞ்சனா, ஜீ. கீர்வாணி
எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின்
எஸ். நடராஜன் — மிருதங்கம்

5-50 — 6-15 வீணை இசை
சத்தியபாமா முத்துக்குமாரு — வீணை
கண்ணதாஸன் — மிருதங்கம்

6-15 — 7-00 பாட்டு
கீர்ணராமேஸ்வரன் — பாட்டு
வீ. கே. குமாரசாமி — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்
உரிமையாளர், வெங்கடேஸ்வரா கந்தசாமி கிருபாகரன்
எஸ். வீ. சிவகுருநாதன் - (வீ. எம். எஸ். நிறுவனம்)
டாக்டர் வீ. ஏகாம்பரம்
தலைவர்: சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கம் (தலைவர் அ. இ. த. மன்றம்)
பிரதம விருந்தினர்: சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் / கிளிநொச்சி)
சிறப்பு விருந்தினர்: நா. க. சண்முகநாதபிள்ளை (அதிபர் யா/மத்திய கல்லூரி)

7-30 — 8-30 இசைக்கச்சேரி
என். வீ. எம். நவரத்தினம் — பாட்டு
வீ. கே. குமாரசாமி — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

8-30 — 9-30 பரதநாட்டியம்
கொழும்புத்துறை "கலைமகள்" மாணவிகள்
தயாரிப்பு: லலிதாஞ்சனா கனகேந்திரன்

வாழ்த்துவோர்:

## ஹரன் வர்த்தக நிலையம்

K. K. S. றோட், தட்டா தெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.

(ஏ 3826)

